**சி.சி. 34/2025.**

அ.சா. 1 காசிராஜன்
த/பெ. அழகர்சாமி
17.06.2026
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 145-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில்

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1. நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் தற்போது கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். அதன்மூலம் ஒரு நாளுக்கு ரூ.700/- வரை வருமானம் கிடைக்குமா என்றால் இல்லை, ரூ.1000/- வரை கிடைக்கும். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும் 6 வருடங்களாக அவரை நன்கு தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதற்கு முன்பாகவே அவரை எனக்கு தெரியும். நான் எதிரிக்கு எனது பணத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்கின்படி நான் பாக்கியராஜ் என்பவரிடமிருந்து பணத்தை வாங்கி எதிரிக்கு கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் பாக்கியராஜிடம் பணம் வாங்கும்போது அவருக்கு புரோநோட் அல்லது வேறு ஏதேனும் எழுதிக் கொடுத்தேனா என்றால் ஆமாம், புரோநோட் எழுதி கொடுத்தேன். பாக்கியராஜிடம் பணம் வாங்கும் போது என்னுடைய தேவைக்காக பணம் தேவைப்படுகிறது என்று சொல்லிதான் வாங்கினேன்

என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததற்கான விபரம் எதுவும் பாக்கியராஜிக்கு தெரியாது என்றால் சரிதான். (சாட்சி தற்போது தாமாக பாக்கியராஜிடம் பணம் வாங்கவில்லை என்றும், அவருடைய மகனான ஆறுமுகத்திடம் தான் பணம் வாங்கி அவரிடம் புரோநோட் எழுதிக் கொடுத்ததாக தெரிவிக்கிறார்). எனது வழக்கறிஞர் அறிவிப்பில் ஆறுமுகம் மகன் பாக்கியராஜிடம் பணம் வாங்கி கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் ஆறுமுகத்திடம் தான் வாங்கினேன். நிரூபண வாக்குமூலத்திலும், மனுவிலும் ஆறுமுகம் மகன் பாக்கியராஜிடம் பணம் வாங்கியதாக தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. திருச்சுழியில் எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்று வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணம் கொடுக்கும் போது என்னுடன் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். பணம் கொடுத்த தேதியில் எதிரி எனக்கு புரோநோட் அல்லது வேறு ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. சுமார் எத்தனை நாட்கள் கழித்து பணம் கொடுத்ததற்கான ஆவணம் எதிரியிடம் வாங்கினேன் என்றால் 10 நாட்கள் கழித்து கேட்டேன், 22.02.2024ம் தேதி காசோலை வாங்கினேன். காசோலை கொடுத்த தேதியில் வேறு எந்த ஆவணமும் எதிரி எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த பணத்திற்கு ஆதாரமாக காசோலை தாருங்கள் என்று கேட்டு வாங்கினேன் என்றால் சரிதான். அந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுங்கள் என்று தேதி எதுவும் குறிப்பிட்டு எதிரி சொல்லவில்லை என்றால் சரிதான், நாங்கள் தான் மறுநாள் வங்கிக்கு சென்று பார்த்தோம். நான் தாக்கல் செய்த காசோலையானது எதிரியின் காசோலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று திருப்பப்பட்டதா என்றால் நிறுத்தப்பட்டது என்று வந்தது. எனது

மனுவில் காசோலையை வங்கியில் செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு எதிரி சொன்னதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனுவில் வங்கியில் போதிய பணம் இல்லாமல்காசோலை வழங்கி திட்டமிட்டு ஏமாற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். காசோலையின் எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் எதிரி சிக்கந்தர் என்னிடம் கடன் வாங்கினார் என்றால் 10.02.2024ம் தேதி பணம் கொடுத்தேன். எதற்காக காசோலை திருப்பப்பட்டது என்று வங்கியில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். இந்த காசோலையானது எதிரியால் 05.12.2022ம் தேதியே காசோலை தொலைந்துவிட்டது என்று மனு அளிக்கப்பட்டு அவருடைய வங்கி கணக்கிலிருந்து அந்த காசோலைக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்று திருப்பப்பட்டது என்று சொன்னார்களா என்றால் நிறுத்தப்பட்டது என்று தான் சொன்னார்கள் விவரமாக சொல்லவில்லை. இந்த மனுவானது 37 நாட்கள் காலதாமதமாக தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த 37 நாட்கள் காலதாமதத்திற்கு மஞ்சள் காமாலை நோயினால் தான் பாதிக்கப்பட்டுள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மஞ்சள் காமாலை நோய்க்கு சிகிச்சை பெற்றதாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி எதிரி என்னிடம் கடனாக எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பாக்கியராஜ் என்பவரிடமோ, ஆறுமுகம் என்பவரிடமோ பணம் வாங்கி கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு வாங்கியிருந்தால் அவர்களே எதிரிக்கு கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி ஜவுளி கடை வைத்திருப்பதால் அவரது கடைக்கு நான் அடிக்கடி சென்று வருவதை வாடிக்கையாக வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எதிரி தனது கடைக்கு கொள்முதல் செய்வதற்காக

கையெழுத்து செய்து வைத்திருந்த காசோலையை திருடிச் சென்றுவிட்டு எனது தேவைக்கேற்ப ரூ.5,00,000/- என நிரப்பி வைக்கப்பட்டிருந்த காசோலையை வசூலுக்கு அனுப்பியுள்ளேனா என்றால் சரியல்ல.